மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# சங்க இலக்கியங்களின் மலை வழிபாடு

**ஜோ.முத்துமீனாள்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி,
மேலைச்சிவபுரி

சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழக மக்களின் வாழ்வியல், நாகரிகம், பண்பாடு முதலான களங்களில் தெளிவான சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இயற்கைப் பின்னணியில் சங்கப்புலவர்கள் படைத்தளித்த பாக்களின் வழியாக அக, புற வாழ்வியலை அறிவதுடன் வாழ்வியல் சார்ந்த வழக்காறுகளையும் அறிந்துகொள்ளத் துணைபுரிகின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்கள் கூறும் வழக்காறுகளில் முக்கியமானது தமிழர்களின் வழிபாட்டு முறை. தொடக்கக்காலத்தில் இயற்கை வழிபாடாக இருந்த வழிபாட்டு நெறி காலப்போக்கில் உருவ வழிபாட்டில் முழுமை அடைந்தது எனலாம். பண்டைத் தமிழர்களின் வழிபடு பொருள்களுள் மலை, மரம், விலங்குகள், சூரியன், நிலவு முதலானவற்றைக் காண முடிகிறது. இயற்கை வழிபாட்டுக் கூறுகளுள் ஒன்றாகச் சிறப்பிடம் பெற்று விளங்குவது மலை வழிபாடு. "மணல் நாளேற ஒன்றுடன் ஒன்று சேர்ந்திறுகிப் பெரும் பாறைகளால் நின்ற பூமியின் மேட்டுப் பாங்கான உயர்நிலை" (அபிதான சிந்தாமணி, ப.154) என்று மலை நிலத்திற்கான விளக்கம் தரப்படுகிறது. மலை பல்வேறு

வடிவங்களையும் தோற்றங்களையும் உடையது என்பதைப் பண்டைத் தமிழர்கள் அதன் உயரத்தைக்கொண்டு வரையறை செய்திருக்கின்றனர். சங்க இலக்கியங்களில் குன்று, வரை, சிலம்பு, வெற்பு முதலான சொற்கள் மலையைக் குறிக்க வழங்கப்பட்டு வந்தமையினை அறிய முடிகிறது. மலைகளில் தெய்வத்தன்மை நிரம்பியிருக்கிறது என நினைத்த தமிழ் மக்கள், அதனை வணங்கத் தலைப்பட்டனர். அவ்வடிப்படையில் மலை வழிபாடு தோற்றம் பெற்றது. "குறிஞ்சி நிலப்பகுதியாகிய மலை நிலத்திலேயே மனிதவாழ்வு தொடங்கியிருக்க வேண்டும். அவ்வாறு வாழ்வைத் தொடங்கிய இனமே பண்டைத் தமிழர் இனம். அவர்கள் மலைபடு பொருள்களைக் கண்டு வளமுற வாழ்ந்தனர். மொழி வகுத்து இசை பயின்று அரசு நிறுவி நாகரிக வாழ்வினையும் கண்டனர்" (வெற்றிச் செல்வன், அறுபடை வீடுகள் ப.7)

இயற்கை வனப்பின் வடிவமாகத் திகழும் மலை கடவுளின் திருத்தோற்றமாகும். மலையில் விளையும் பொருள்களும் மலையிடத்தில் வாழ்வோரும் பிற உயிர்களும் கடவுளின் வடிவங்களான இயற்கை வடிவங்களே. இயற்கை வனப்போடு உயர்ந்து விளங்கும் மலை, மனித வாழ்வுக்கென்று இறைவனால் படைக்கப்பட்டதாகும். மனிதன் இயற்கையோடியைந்து இன்பம் சான்ற வாழ்வு நடத்தினான் (மேலது. ப.9) என்று கூறுவர்.

மனித வாழ்வுக்குத் தேவையான பொருட்களை எல்லாம் மனிதனுக்குத் தேவையான பொருள்களை எல்லாம் நல்கும் மலை உயர்ச்சியாலும் வலிமைத் தன்மையாலும் வழிபாட்டுக்கு உரியதாக விளங்கியது. அம் மலைகளில் வரையர மகளிர், சூரர மகளிர், அணங்கு, சூர், முதலான தெய்வங்கள் வாழ்ந்ததாகப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மலைப்பகுதிகள் தெய்வத்தன்மை பொருந்தியவை என்பதை அகநானூறு தெளிவுப்படுத்துகிறது.

அருந்தெறல் மரபின் கடவுள் காப்ப
பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை
அணங்குடை வரைப்பின் பாழி ஆங்கண் (அகம். 372: 1-3)

மலையில் உறையும் தெய்வங்கள் அதிகமான சக்தி கொண்டவை என்றும் அவை துன்புறுத்தும் தன்மை வாய்ந்தவை என்றும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஈர்ந்தண் சிலம்பின் இருந்தூங்கு நளிமுழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை
பெருங்கல் நாடன் பேகனும் ( நற். 165:37)

மலையில் உறையும் தெய்வங்கள் அணங்கு, வரையர மகளிர் என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டமையை அறிய முடிகிறது. (புறம். 158:10-12, கலி. 52:10)

பண்டைய மக்கள் மலைப் பகுதியில் பயணம் செல்வதும் அங்கு நீண்ட காலம் தங்கியிருப்பதும் துன்பம் வருவதற்கான வழிகள் என்று நம்பினர். நன்னன் சேய் நன்னனைச் சந்தித்து கலை நிகழ்த்திப் பரிசு பெற்ற கூத்தன் ஒருவன் வழியில் எதிர்ப்பட்ட கூத்தனை நன்னன் சேய் நன்னனிடம் பரிசில் பெற ஆற்றுப்படுத்தும்போது சுனைகளில் மலர்ந்திருக்கும் குவளை மலர்கள், மலைக் குகைகள் ஆகியவை வரையர மகளிர் உலாவும்

இடங்கள் என்றும் அவர்களுக்குப் பிடித்தமான இடங்கள் என்றும் குறிப்பிட்டு அவ்விடங்களில் நீண்ட நாட்கள் தங்கயிருக்கலாகாது என்று கூறுவதைக் காணலாம்.

அணையது அன்று அவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவளை கடிவீ தொடினும்
வரையர மகளிர் இருக்கை காணினும்
உயர்செல வெம்பிப் பனித்தலும் உரியர்
பலநாள் நில்லாது நிலநாடு படர்மின் (மலைபடு. 188 - 192)

வரையர மகளிர்கள் அடர்ந்த மலைகளில் விளையாடி மகிழும் தன்மையர் என்றும் அவர்கள் விளையாடுகின்ற காரணத்தால் மலைகளில் மலர்ந்துள்ள மலர்கள் எல்லாம் தரையில் சிதறிக் கிடக்கும் என்று குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகிறது.

வரையர மகளிரின் சாஅய் விழைதக
விண்பொரும் சென்னிக் கிளை இய காந்தள்
தண்கமழ் அலரிராஅல் நன்பல
வம்புவிரி களத்தின் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடன் (குறிஞ்சி ப. 195 - 199)

வரையர மகளிர் அழகு மிக்கவர்களாகவும் கண்களுக்குப் புலப்படாத தோற்றத்தையும் உடையவர்களாக இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது (ஐங் . 255: 3-4 : குறிஞ்சிப் 195-198) வரையர மகளிர்கள் வலிமை உடையவர்கள் என்னும் காரணத்தால் அவர்களை வணங்குவதற்கு முற்பட்டிருக்கலாம் என்பதை அறிய முடிகிறது. மலையில் வாழ்ந்த தெய்வங்கள் அனைத்தும் "அணங்கு" என்னும் பெயரால் அழைக்கப்பட்டமையினை மு.சண்முகம் பிள்ளை தெளிவுப்படுத்துகிறார்" (மு. சண்முகம்பிள்ளை, சங்கத் தமிழரின் வழிபாடும், சடங்குகளும், ப.115)

குறிஞ்சித் திணைக் களவு வாழ்க்கையில் இரவுப் பொழுதில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவனை அணங்குகன் துன்புறுத்தும் வாய்ப்பு உண்டு என்பதால் இரவுக் குறியில் வரவேண்டாம் என்று தடுத்துக் கூறுவதைக் கலித்தொகை தெளிவாக்குகிறது. (கலி. 52: 9-10)

மலைப் பகுதியைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்த மக்கள் மலையில் கிடைத்த பொருள்களைக்கொண்டு வாழ்ந்து வந்தனர். அத்துடன் மலையுறை தெய்வங்கள் தம் வாழ்வுக்குக் காவலாய் அமையும் என்னும் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். நற்றிணை மக்கள் ஒன்று சேர்ந்து மலையுறை தெய்வத்தை வழிபட்டமையினைத் தெளிவுப்படுத்துகிறது.

அணங்கொடு நின்றதுமலை வான்கொள்கெனக்
கடவுள் செங்குவரை வேண்மார் வேட்டு எழுந்து
கிளையொடு மகிழும் குன்ற நாடன் (நற். 165: 3-5)

மலையில் வாழ்ந்த மக்கள் மலையில் கிடைத்த பொருள்களைக் கொண்டு

மலையுறை தெய்வத்தை வணங்கியதுடன் விழா எடுத்து வழிபட்டமையினையும் அறிய முடிகிறது. தேன், மாங்கனி, பலாச்சுளை, தேன்கொண்டு செய்யப்பட்ட கள் ஆகியவற்றைப் படைத்துத் தாமும் உண்டு களித்துக் குரவையாடிய பான்மையினை அறிய முடிகிறது. மலைவாழ் தெய்வங்களை வணங்குவதன் காரணமாக அச்சத்தில் இருந்து விடுபட இயலும் என்னும் நம்பிக்கை கொண்டதும் தம் வளமான வாழ்வுக்கு அத்தெய்வங்களே காரணமாகும் என்னும் நம்பிக்கை நிலவியமையினையும் காரணமாகலாம்.

தேன்தேர் சுவைய திரளரை மாஅத்து
கோடைக்கு ஊழ்த்த கமழ் நறுந்தீங்கனி
பயிர்ப்புறப் பலவின் எதிர்சுளை அளை,
இறாலொடு கலந்த வண்டுமூசு அரியல்
நெடுங்கண் சூடமை பழுநி கடுந்திறல்
பாம்புக் கடுப்பன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவுள் ஓங்கு வரைக்கு ஓச்சி குறவ
முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி
அடுக்கல் ஏனல் இரும்புனம் மறுத்துழி

(அகம். 348: 2-10)

வரை உறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீ, யாமாட குரவையுள்
கொண்டு நிலை பாடிக்காண் (கலி. 39: 27-29)

என்னும் பாடற்பகுதிகள் மேற்கண்ட செய்திகளுக்கு அரண் செய்கின்றன. மலைஉறை தெய்வங்களை மகிழ்விப்பதற்காகப் படையல் இட்டும் குரவையாடியும் வணங்கியமையினை அறிய முடிகிறது.

மலை உறை தெய்வங்கள் மலையில் உறைகின்ற காரணத்தாலும் உயர்ச்சியை உடையதாலும் வாழ்வுக்கு வளத்தை வழங்குவதாலும் மலை வழிபாட்டுக்கு உரியதாக விளங்கியமையினை அறிய முடிகிறது.